## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 27.09.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி பகுதியில் உள்ள RRC மையத்தில் உள்ள கரட்டூர் வளமீட்பு மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அரியலூர் Ultra Tech மற்றும் Dalmia சிமெண்ட் ஆலைகளுக்கும், Trichy Dalmia Cement ஆலைக்கும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் மூலம் அனுப்பி வைத்திட வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் பணிக்கு 03.09.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.2861/2023/எச்1

| வ. எண் | நிறுவனம் விபரம் | 1 டன் (1000 Kg) எடுத்து செல்வதற்கான ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S.Eco Environ Solutions, 20/2 Indiraganthi Street, Palayapalayam, Erode. | ரூ. 1750/– |
| 2 | M/S.Explosive Enter Prises, 12 PMK Rice Mill Street, Pudupalayam, Gobichettipalayam. | ரூ. 1680/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள M/S.Explosive Enter Prises, 12 PMK Rice Mill Street, Pudupalayam, Gobichettipalayam என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

**அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்க்கப்பட்டது , மன்ற தீர்மான எண்.977**

**2.** இந்நகராட்சி பகுதியில் உள்ள வாய்க்கால் ரோடு, பொதுசுகாதாரப் பிரிவு அலுவலகம் மற்றும் மொடச்சூர் வாரசந்தை வளாகத்தில் உள்ள வாகனம் நிறுத்தும் இடம் போன்ற இரண்டு இடங்களிலும் மினி ஆட்டோக்கள் மற்றும் BOV's நிறுத்தப்பட்டு வருவதால் அவ்வாகனங்களின் பாதுகாப்பிற்காக அங்கு CCTV பொருத்தி கொடுக்கும் பணிக்கு 28.08.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.1265/2024/எச்1

| வ.எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S.Agni Micro Tech,33Gr.Floor, Saraswathi Towers.10th Street, Gandhipuram,Coimbatore. | ரூ. 52,500/– + (18 % GST) |
| 2 | M/S.Pride Systems,39/1 Erode Main Road, Opp.Telephone Exchange,Erode District. | ரூ. 52,300/– + (18 % GST) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2– ல் கண்டுள்ள M/S.Pride Systems, 39/1 Erode Main Road, (Opposite) Telephone Exchange, Erode District என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்க்கப்பட்டது , மன்ற தீர்மான எண்.978**

3. இந்நகராட்சியின் வார்டு எண்.3 ராமர் எக்ஸ்டன்னில் உள்ள இறந்தவர்களின் உடல்கள் மண்ணடக்கம் செய்யும் பகுதியில் முள்செடிகள், செடி கொடிகள், மரங்கள் போன்றவைகள் வளர்ந்து உள்ள இடத்தினையும் RRC மையத்தின் நுழைவு வாயிலின் கிழக்கு பக்கம் உள்ள பழைய பிளாஸ்டிக் கழிவுகளை JCB மூலம் சுத்தம் செய்து அகற்றும் பணிக்கு 28.08.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.0044/2024/எச்1

| வ.எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.விஜயன்,JCBவிநியோகம் செய்பவர், 174/174 திருவள்ளுவர் தெரு,ஓலப்பாளையம், நாகதேவம்பாளையம்,ஈரோடு மாவட்டம். | ரூ. 1000/–(ஒரு மணி நேரம் பணி செய்ய) |
| 2 | ஸ்ரீ செல்லாண்டியம்மன் எர்த் மூவர்ஸ், 350/1 பச்சைமலை கோபிசெட்டிபாளையம். | ரூ. 1100 /– (ஒரு மணி நேரம் பணி செய்ய) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1– ல் கண்டுள்ள திரு.ஆர்.விஜயன், JCBவிநியோகம் செய்பவர், 174/174 திருவள்ளுவர் தெரு, ஓலப்பாளையம், நாகதேவம்பாளையம், ஈரோடு மாவட்டம் என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்க்கப்பட்டது , மன்ற தீர்மான எண்.979**

4. இந்நகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மை பாரத திட்டம் 2.0 SafaiMittra Surakshitshehar (SSS) ன் கீழ் பணியில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய கீழ்காணும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட PPE Kits மற்றும் Saftey Gears போன்றவற்றை கொள்முதல் செய்யும் பணிக்கு 20.08.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1020 /2024/எச்1

| வ. எ | நிறுவனம் விபரம் | பாதுகாப்பு உபகரணங்கள் ஒன்றின் விலை விகிதம் | | | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1 | M/s. Sri Mother Safety, 443, Lakshmi nagar, Bhavani main road, Erode – 638001. | 1 | Nylon Rope Ladder | ரூ.10500/– + (18% GST) | |
| | | 2 | Full Body Wader Suit | ரூ.1450/– + (18% GST) | |
| | | 3 | Gas Mask | ரூ.800/– + (18% GST) | ரூ. 17490/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | +<br>( GST 18%) |
| | | 4 | Safety Body Haarness | ரூ.1950/- + (18% GST) | |
| | | 5 | Safety helmat | ரூ.250/- + (18% GST) | |
| | | 6 | Normal face mask | ரூ.125/- + (18% GST | |
| | | 7 | Safety body clothing | ரூ.1850/- + (18% GST | |
| 2 | M/s. Sri.Auro raam fire and Safety equipments, 9/2 Akilmedu,6th Cross Street,<br>Erode – 638001 | 1 | Nylon Rope Ladder | ரூ.10520/- + (18% GST) | ரூ. 17000 /-<br>+<br>( GST 18%) |
| | | 2 | Full Body Wader Suit | ரூ.1500/- + (18% GST) | |
| | | 3 | Gas Mask | ரூ.820/- + (18% GST) | |
| | | 4 | Safety Body Haarness | ரூ.2200/- + (18% GST) | |
| | | 5 | Safety helmat | ரூ.800/- + (18% GST) | |
| | | 6 | Normal face mask | ரூ.150/- + (18% GST | |
| | | 7 | Safety body clothing | ரூ.2000/- + (18% GST | |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2- ல் கண்டுள்ள M Sri Auro raam, 9/2, Akilmedu 6 th cross Street, Aandaver Complex, Bus stand Back side, Erode – 638 001 என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்க்கப்பட்டது , மன்ற தீர்மான எண்.980**

5. இந்நகராட்சியின் 2024-2025-ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், அனைத்து விதமான வரி மற்றும் வரியில்லா இனங்களின் இரசீதும், படிவங்கள், அம்மா உணவக டோக்கன் மற்றும் பதிவேடுகள் ஆகியவை கொள்முதல் செய்ய வேண்டி ரூ. 5.00 இலட்சத்திற்கு நகர் மன்ற

தீர்மான எண் 877, நாள் 28.06.2024 அன்று அனுமதி பெறப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தற்போது நடைபெறும் நகர்மன்ற கூட்டம், ஆய்வுக்கூட்டம், கணக்கெடுப்பு பணிகள் மற்றும் பல்வேறு பணிகளுக்கான அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. இதனால், அதிகபடியான பேப்பர்கள் மற்றும் இதர பதிவேடுகள் தேவைப்படுகிறது. எனவே, மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ. 10,00,000/- (பத்து இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க. எண்.1017/2024/டி2)

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.981**

6. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் நிலவும் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (2ப) எண் 66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் (ந,நி,4) துறை நாள் 06.08.2024 ல் வெளியிடப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண். 3060/2016/அ3

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு : பதிவுசெய்யப்பட்டது. மன்ற தீர்மான எண்.982**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் எதிர்வரும் 30.10.2024 உடன் மூன்றாண்டு குத்தகை உரிம காலம் முடிவடைகிறது, மேலும் வருவாய் ஆய்வரின் 29.08.2024 ம் தேதிய குறிப்பில் மேற்படி இரு சக்கர வாகனக் குத்தகை இனத்தில் மிதிவண்டிக்கு நாளொன்றிகான கட்டணம் ரூ,7/— என்பதை ரூ,10./ என உயர்வு செய்தும் இரு சக்கர மோட்டார் வாகனத்திற்கு நாளொன்றிகான கட்டணம் ரூ12./ என்பதை ரூ,15./ எனவும் உயர்வு செய்தும் மேற்படி குத்தகை இனத்திற்கான வைப்பு தொகையை ரூ,3,00,000/—. என்பதை ரூ,6,00,000/—. என உயர்வு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

எனவே மேற்படி வருவாய் ஆய்வரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மிதிவண்டிக்கு நாளொன்றிகான கட்டணம் ரூ,7/— என்பதை ரூ,10./ என உயர்வு செய்தும் இரு சக்கர மோட்டார் வாகனத்திற்கு நாளொன்றிகான கட்டணம் ரூ12./ என்பதை ரூ,15./ எனவும் உயர்வு செய்தும் மேற்படி குத்தகை இனத்திற்கான வைப்பு தொகையை ரூ,3,00,000/—. என்பதை ரூ,6,00,000/—. என உயர்வு செய்யவும் மேற்படி குத்தகை இனத்தை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

மேலும் நகராட்சியில் உள்ள பழைய பேருந்து நிலைய கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிதாக கட்டிடம் கட்ட வேண்டி உரிய பிரோணை அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கும் பட்சத்தில் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உட்பட்டு கடையினை காலி செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். ந,க,எண் 2560/2024/அ3

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.983**

8. நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண். 19 (வரி விதிப்பு எண். 057/835 கொண்ட கடைக்கு 01.04.2016 ஆம் ஆண்டு முதல் வாடகை மறுமதிப்பீடு செய்தது தொடர்பாக நகராட்சிக்கு எதிராக கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 61/2017 ன் படி திரு. சு, பாலமுருகன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார் மேற்படி வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் அரசாணை எண் 81 நாள் 13.06.2024 ன்படி மேற்படி வழக்கு 24.08.2024 அன்று நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது,

வருவாய் ஆய்வாளர் அவர்கள் தனது 12.09.2024 ஆம் தேதிய குறிப்பில் மேற்படி திரு, சு,பாலமுருகன் என்பவர் வழக்கறிஞர் வாயிலாக மேற்படி கடையினை 2016 ல் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துவிட்டார் என தெரிவித்துள்ளளார், மேற்படி நபர் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்தது தொடர்பாக எந்தவித கோப்பும் இல்லை, மேலும் மனுதாரர் வைப்பு தொகை ரூ,32000/ வழங்க கோரிய மனு ஏதும் செய்யப்பட்ட கோப்பும் இல்லை மேலும் மேற்படி MUDF கடை எண் 19 பூட்டப்பட்ட நிலையில் உள்ளது, எனவே பழைய பேருந்து நிலைய கடை எண். 19 (வரி விதிப்பு எண். 057/835 கடைக்கு திரு, சு, பாலமுருகன் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.08.2024 முதல் ரத்து செய்யவும், 01.092024 ஆம் தேதி முதல் மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார், எனவே வருவாய் ஆய்வரின்

குறிப்பின் படி பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 19 (வரி விதிப்பு எண். 057/835 ) கடைக்கு திரு,சு. பாலமுருகன் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.08.2024 முதல் இரத்து செய்து மேற்படி கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் நகராட்சியில் உள்ள பழைய பேருந்து நிலைய கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிதாக கட்டிடம் கட்ட வேண்டி உரிய பிரோணை அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கும் பட்சத்தில் நகராட்சியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உட்பட்டு கடையினை காலி செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். ந.க,எண் 2560/2024/அ3

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது, மன்ற தீர்மான எண்.984**

9. நகராட்சிக்கு சொந்தமான IUDP புதிய பேருந்து நிலைய கடை எண். 15 (வரி விதிப்பு எண். 057/575 கொண்ட கடைக்கு 01.04.2016 ஆம் ஆண்டு முதல் வாடகை மறுமதிப்பீடு செய்தது தொடர்பாக நகராட்சிக்கு எதிராக கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 61/2017 ன் படி திரு, சுப்பிரமணியம் வழக்கு தொடர்ந்துள்ளார் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் அரசாணை எண் 81 நாள் 13,06.2024 ன்படி மேற்படி வழக்கு 24.08.2024 அன்று நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது,

வருவாய் ஆய்வாளர் அவர்கள் தனது 12.09.2024 ஆம் தேதிய குறிப்பில் மேற்படி திரு, சுப்பிரமணியம் என்பவருக்கு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து வாடகை நிலுவைத் தொகை ரூ.6,04,720./- (2019-2020 ஆகஸ்ட் முதல் 2024-25 ஆகஸ்ட் வரை) செலுத்தக் கோரி அறிவிப்பு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டும் கடையில் ஒட்டப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு முகவரியில் மேற்படி நபர் இல்லை என திரும்ப வரப்பெற்றது,

IUDP கடை எண் 15 ன் குத்தகைதாரர் திரு, சுப்பிரமணியம் தொடர்பாக அருகில் உள்ள கடைகாரரிடம் விசாரணை செய்ததில் மேற்படி நபர் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னரே கடையினை வேறு ஒரு நபரிடம் ஒப்படைப்பு செய்துவிட்டார் எனவும் திரு, சுப்பிரமணியம் என்பவர் கோத்தகிரி பகுதியில் வசித்து வந்தார் எனவும் மேற்படி கடை நடத்தி வந்த நபர் கடந்த 2019-2020 கோவிட் பொது ஊரடங்கில் கடை அடைப்பு செய்த காலத்தில் உடல் நலக் குறைவால் இறந்துவிட்டார் எனவும் தெரிவித்தனர்.

மேலும் மேற்படி கடையின் மின் இணைப்பு எண் 04/307-013-351 தொடர்பாக இளமின் பொறியாளர் இயக்கம் மற்றும் பராமரிப்பு புதுப்பாளையம் அவர்கள் மேற்படி கடையின் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலான மின் அளவியை எடுக்க வேண்டி கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே IUDP புதிய பேருந்து நிலைய கடை எண். 15 (வரி விதிப்பு எண். 057/575 ) கடைக்கு திரு, சுப்பிரமணியம் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை ஆகஸ்ட் மாதம் முதல் ரத்து செய்யவும், 01.092024 ஆம் தேதி முதல் மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார்,

எனவே வருவாய் ஆய்வரின் குறிப்பின் படி IUDP புதிய பேருந்து நிலைய கடை எண். 15 (வரி விதிப்பு எண். 057/575 ) கடைக்கு திரு,சுப்பிரமணியம் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.08.2024 முதல் இரத்து செய்து மேற்படி கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 3060/2016/அ3

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது., மன்ற தீர்மான எண்.985**

10. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடிதம் ந.க.எண்.31917/2019/டிபி2, நாள்25.07.2024 இல் அரசாணைகள் 133, மற்றும் 134 வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை,

அரசாணை(நிலை)எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய அரசாணைகளின் படி சுயசான்று முறையில் கட்டிட அனுமதி (Self – Certification Model) வழங்க கட்டணங்கள் முறைப்படுத்தப்பட்டு, மாநகாரட்சிகள், நகராட்சிகள், என தனிதனி கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் சுற்றறிக்கை கடிதத்தில் வ.எண்.4(ii)ல் அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் சுயசான்று மூலம் கட்டிட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால் இவ்வரசாணையில் கட்டுப்படாத இதர கட்டுமானங்களுக்கு ஏற்கனவே அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களால் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டணங்களுக்கு அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு இணையாக உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் ஈரோடு மாவட்ட அரசிதழ் எண்–8ல் வெளியிடப்பட்டுள்ள கட்டணங்களில் குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் என வகைபாடுகள் செய்யப்பட்டு அவை ஒவ்வொரு இனங்களுக்கும் தனித்தனி கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | உரிமம் வழங்கப்படும் காரியம் | தற்போதைய கட்டணம் | ஆண்டுகள் |
|---|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் தரைத்தளம் | 800/–10 ச.மீ அல்லது அதன் பாகத்திற்கு | 5 வருடம் |
| | முதல் தளம் | 1000/–10 ச.மீ அல்லது அதன் பாகத்திற்கு | 5 வருடம் |
| | ஒவ்வொரு முதல் மாடிக்கும் கூடுதல் மாடிக்கும் | 450/–10 ச.மீ அல்லது அதன் பாகத்திற்கு | 5 வருடம் |

2. குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்

| | | |
|---|---|---|
| தரைதளம் | ரூ.1600/–10ச.மீ அதன் பாகத்திற்கும் | 5 வருடம் |
| முதல்தளம் | ரூ.2000/–10 சமீ அதன் பாகத்திற்கும் | 5 வருடம் |
| ஒவ்வொரு முதல் மாடிக்கும் கூடுதல் மாடிக்கும் | ரூ.900/–10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கம் | 5 வருடம் |
| தனிப்பட்ட கட்டப்படும் குளியலறை, கழிப்பிடம், மேல்நிலைதொட்டிகள் தொட்டிகள், செப்டிங் டேங், போர்வெல் அமைக்க | ஒவ்வொரு இனத்திற்க்கும் தனிதனியாக 600/– | 5 வருடம் |

| அபிவிருத்தி கட்டணம் (Development Charges) | |
|---|---|
| குடியிருப்பு கட்டிடம் மனைக்கு | 2.00 / ச.மீட்டர் |
| குடியிருப்பு கட்டிடத்திற்கு | 3.00 / ச.மீட்டர் |
| குடியிருப்பு அல்லாத கட்டிடம் மனைக்கு | 3.00 / ச.மீட்டர் |
| குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு | 6.00 / ச.மீட்டர் |
| குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு சாலைகளில் கொட்டப்படும் மணல், செங்கற்கள், ஜல்லிகள் சேகரிக்க | ரூ.3000/– 1தடவை |
| இடினமான பொருட்கள் அகற்றுதல் | ரூ.1500/–1தடவை |
| மழைநீர் சேகரிப்பு அமைக்க குடியிருப்பு கட்டிடம் | 3000/–1தடவை |
| வணிக கட்டிடம் | ரூ.5000/–1 தடவை |

மேற்காணும் கட்டணங்கள் நகராட்சியில் வசூலிக்கப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது சுயசான்று மூலம் (Self Certification Model ) நடைமுறையில் உள்ளதால் இதில் அரசாணைகள் படி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதால் இதற்க்கு இணையாக இவ்வரசாணையில் கட்டுப்படாத இதர கட்டுமானங்கள் குடியிருப்பு மற்றும்

வணிக உபயோக கட்டிடங்களுக்கு கட்டணங்களை அந்தந்த உள்ளாட்சிகளில் நிர்ணயம் செய்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தற்போது உள்ள அரசாணைகள் படி ஒரே கட்டணமாக வசூலிக்க கீழ்காணும் விபரப்படி கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. இதர குடியிருப்பு கட்டிடங்களுக்கும், மற்றும் ஒட்டு கூரை கட்டிடங்கள்

| கட்டிட உரிம கட்டணம் Buliding Lincence | அபிவிருத்தி கட்டணம் D.C | தொழிலாளர் நலநிதி L.W.F | மொத்தம் Total |
|---|---|---|---|
| 566/- ச.மீ | 13/- ச.மீ | 221/ ச.மீட்டர் | 800/ ச.மீட்டர் (அல்லது) 74 சதுர அடி |

2. வணிகக்கட்டிடம் /தொழிற்சாலை/ கல்வி மற்றும் இதர குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 30% சதவீதம் கூடுதலாக கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

| கட்டிட உரிம கட்டணம் Buliding Lincence | அபிவிருத்தி கட்டணம் D.C | தொழிலாளர் நலநிதி L.W.F | மொத்தம் Total |
|---|---|---|---|
| 566X30%=170<br>566+170=736 | 13X30%=3.9=5/-<br>13+5=18/- | 221/- ச.மீட்டர் | 975/- ச.மீட்டர் |

| | | | |
|---|---|---|---|
| 3. i | புதிய மனைப்பிரிவு அனுமதித்தல் | தற்போதைய கட்டணம் ரூ.30,000/ 1 தடவை மனைப் பிரிவு அமைக்க உள்ள நிலத்தின் ஒவ்வொரு ஏக்கர், பரப்பிற்கும் | திருத்தப்பட்டுள்ள கட்டணம் 50,000/1 தடவை |
| Ii | மனைப்பிரிவு அங்கீகாரம் ஒவ்வொரு மனையும் அங்கீகரிக்க கூராய்வு கட்டணம் | ரூ.1000/- 1 மனைக்கு | ரூ.2000/- 1 மனைக்கு |
| Iii | மனைஅபிவிருத்தி கட்டணம் | ரூ.3/- ச.மீட்டர் | ரூ.5/- ச.மீட்டர் |
| iv | மனைபிரிவு உபயோக மாற்றம் 3% Guide line value | | |

4. நில உபயோக மாற்றம் செய்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | G.O.NO. MS.18 நாள் 04.02.2019 | நிலஉபயோக மாற்றம் செய்தல் | தற்போது உள்ள கட்டணம் ரூ. 20,000/- மொத்த பரப்பிற்கு | திருத்தப்பட உள்ள கட்டணம் ரூ.30,000/- மொத்த பரப்பிற்கு |
| (ii) | மனை அபிவிருத்தி கட்டணம் | | ரூ.3/- ச.மீட்டர் | ரூ.6/- ச.மீட்டர் |

5. கட்டிட அனுமதி பெற்று மேல் முறையீடு செய்யப்பட்டும் கட்டிடங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | G.O.NO. MS.18 நாள் 04.02.2019 | கூராய்வு கட்டணம் | தற்போதைய கட்டணம் 2/- ச.மீ (5ஆண்டுகள்) | திருத்தப்பட உள்ள கட்டணம் 4/- ச.மீ (5ஆண்டுகள்) |
| (ii) | G.O.NO. MS.18 நாள் 04.02.2019 | 1st Revised Plan | 1.00/- ச.மீ (5ஆண்டுகள்) | 2.00/- ச.மீ (5ஆண்டுகள்) |
| (iii) | G.O.NO. MS.18 நாள் 04.02.2019 | 2st Revised Plan | 40பைசா 1ச.மீ (5ஆண்டுகள்) | 80 பைசா 1ச.மீ (5ஆண்டுகள்) |
| (iv) | G.O.NO. MS.18 நாள் 04.02.2019 | 3st Revised Plan | 20 பைசா 1ச.மீ (5ஆண்டுகள்) | 40பைசா 1ச.மீ (5ஆண்டுகள்) |

6. மனை உட்பிரிவு, மனை ஒருங்கிணைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | G.O.NO. MS.18 நாள் 04.02.2019 | மனை உட்பிரிவு/மனை ஒருங்கிணைப்பு | தற்போதைய கட்டணம் 75 பைசா/ 1ச.மீ ஒருமுறை மட்டும் | திருத்தப்பட உள்ள கட்டணம் 2/ச.மீ ஒருமுறை மட்டும் |
| | | மனைஉட்பிரிவு/ மனை ஒருங்கிணைப்பு நகர் ஊரமைப்பு இயக்குநர் அரசு கணக்கில் செலுத்த | 1000/- ஒருமுறை மட்டும் | 2000/- ஒருமுறை மட்டும் |

| | | | |
|---|---|---|---|
| 7 | கோபி நகராட்சி எல்லைக்குள் நில அளவை பதிவேடுகளின் படி சர்வே ஆவணங்கள் RSR நகல் மற்றும் சர்வே வரைபடம் நகல் கொடுக்க சர்வே எண் ஒன்றுக்கு | 450/- சர்வே எண்(ஒன்றுக்கு) | 600/- சர்வே எண்(ஒன்றுக்கு) |

| | | | |
|---|---|---|---|
| 8 | மனைபிரிவு வரைபடங்கள்/ நகர வரைபடம், மற்றும் கட்டிட வரைபடங்கள் வழங்க | ரூ. 1000/- 1 வரைபடம் ஒன்றுக்கு | ரூ. 1500/- 1 வரைபடம் ஒன்றுக்கு |

| | | | |
|---|---|---|---|
| 9 (i) | நகராட்சி கட்டிடபட வரைவர் Register Engineer பதிவு செய்ய உரிமகட்டணம் | ரூ.5,000/- G.O.NO. MS.18 நாள் 04.02.2019 (5 ஆண்டு ) | ரூ.6000/- 5ஆண்டுக்கு |
| (ii) | வைப்புத் தொகை | ரூ.5,000/- (1 தடவை) | ரூ.5,000/- (1 தடவை) |

10. அனுமதியற்ற கட்டுமானங்களின் மீது கட்டிட அனுமதிக்கான கட்டணங்கள் ஏதும் இதுவரை வசூல் செய்யப்படுவது இல்லை. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு இந்த இனங்களுக்கு கட்டி அனுமதிக்கான கட்டணம் மட்டும் வசூல் செய்யலாம். இதற்கு கட்டிட அனுமதி வழங்க இயலாது இந்த இனங்களில் விதிமுறைகளின் படி கட்டிடம் இடிக்கப்படும் நிலையில் கட்டிட அனுமதிக்கான கட்டணம் திரும்ப வழங்கலாம். மேலும் இதனை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25,000ற்கும் மற்றும் மேற்காணும் கட்டணங்கள் புதியதாக நிர்ணயம் செய்யவும் நகர்மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.1277/2024/எப்1

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.986**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 13,கதவு எண் 31 பழைய ஆஸ்பத்திரி வீதியில் உள்ள திரு.G.M.S கவிதாமணி, பி.அம்பிகா என்பவர் தனது கடையின் கழிவு நீரை சாலையின் எதிர்புறம் உள்ள கழிவு நிர் கால்வாயில் குழாய் அமைத்து கழிவு நீரை விட அனுமதி வழங்க கோரியும், அதனை தங்களது சொந்த செலவில் செய்து கொள்வதாகவும், 02.09.2024ம் தேதியில் கடிதத்தின் மூலம் கோரியுள்ளமைக்கு பொறியாளர் அவர்கள் 13.09.2024ம் தேதிய குறிப்பின்படி, அவர்களது சொந்த செலவில் பராமரிப்பு பணிகள் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1581/2024/இ1

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.987**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் ஆரம்பப்பள்ளி, நாய்க்கன் காடு ஆரம்பப்பள்ளி மற்றும் சிலேட்டர் ஹவுஸ் வீதியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு குழந்தைகள் கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி

பணிகள் சென்னை அவர்களிடமிருந்து ந.க.எண் 3099/NC-3/2024 நாள் 28.06.2024 ன்படி, அரசு மானியம் தொகை ரூ.36000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மூன்று பள்ளிகளுக்கும் சேர்த்து ரூ36000x3=108000) ஆனால் 1 Unit க்கு ஆகும் செலவு தொகை ரூ. 72000 ஆகும். மூன்று பள்ளிகளுக்கும் சேர்த்து ரூ.72000x3=216000). எனவே அரசு மானியத்தொகை மூன்று பள்ளிகளுக்கும் சேர்த்து ரூ.108000/- கழித்தது போக (216000-108000=108000 ) மீதித்தொகை ரூ.108000/- அத்தொகையினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1580/2024/இ1

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவு தொகை ரூ.108000/- நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. 2, மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.988**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28 வடக்கு வீதி, வார்டு எண் 26 சிவசண்முகம் வீதி, வார்டு எண் 14 கல்யாணி நகர் மற்றும் வார்டு எண் 9 கம்பர் வீதி ஆகிய பகுதிகளில் சிறுபாலம் பழுது ஏற்பட்டு போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேற்படி சிறுபாலம் பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1126/2024/இ1

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவு தொகை ரூ.4,80 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.989**

14. இந்நகராட்சியில் வருவாய் நிதியில் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 10.09.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.4463/2021/இ1

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | தினசரி மார்க்கெட் வணிக வளாகத்தின் மின் சாதன பணி மேற்கொள்ளுதல் | 39,75,000 | SPD Engineering Contractors ஒப்பந்ததாரர் | -0.05 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | Logu constructions ஒப்பந்ததாரர் | 0.72 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**நிபந்தனைகள் 1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள SPD Engineering Contractors ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது. 2. ஏற்க்கப்பட்டது , மன்ற தீர்மான எண்.990**

15. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4, விவேகானந்தர் வீதி-7 ல் உள்ள சமுதாயக்கூடத்தில் உள்ள மின் இணைப்பு மின் கசிவு காரணமாக அருகில் உள்ள சுவற்றில் மாற்றுவதற்கு (Shifting ) தமிழ்நாடு மின்சார வாரிய கட்டணம், மற்றும் சர்வீஸ் ஒயர்கள் மாற்றுவதற்கு மதீப்பீட்டு தொகை ரூ.40,000/- ஆகும். மேற்கண்ட பணியை விலைபுள்ளி பெற்று மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கல்வி நிதியில் பணியை மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.991**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய ஆஸ்பத்திரி வீதியில் தமிழ்நாடு அரசு கலைஞர் நகர்புறமேம்பாட்டு திட்ட நிதியில் கட்டப்பட்டு 12/08/2024–ல் திறப்புவிழா கண்ட நூலகம் மற்றும் அறிவுசார்மையத்திற்கு தேவையான வார இதழ் மற்றும் மாத இதழ்கள் வாங்க வேண்டியுள்ளது மேற்படி இதழ்களுக்கான ( COMPETITION SUCCESS , KURUKSHETRA , YOJANA , திட்டம் , EMPLOYMENT NEWS & ETC ) ஆண்டு சந்தா ஆகும் உத்தேசசெலவினம் ரூ. 5.500/– ஆகும். மேற்படி இதழ்கள் விநியோகம் செய்யவும் . அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **ந.க.எண்.**1438/2024/**பி3**

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.**992

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிரமம் வார்டு – D, பிளாக் –6, நில அளவை எண்.175, நகரளவை எண்.14/1A1B ஆண்டவர் காலனி பகுதியில் இல் அமைக்கப்பட்ட 2.56 ஏக்கர் ஆண்டவர் காலனி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கோவை மற்றும் நீலகிரி மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (தனி ) கோவை 2 அவர்களால் ப.மு.எண். 5133/ 78/ கோ. நீ.மா–3 நாள்.03.07.1978 ஆம் ஆண்டு LP/R(CN) NO.72/78 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது, மேற்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளின்படி 14.60 செண்ட் காலியிடம் பொது உபயோக பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யபட்ட இடத்தில் 7செண்ட் அளவிற்கு மாவட்ட நீதிபதி முகாம் அலுவலகம் கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஆட்சேப்பினையின்மை கடிதம் வழங்கப்பட்டதை எதிர்த்து திரு.சி. ஆனந்தக் குமார் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற பொது பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு மற்றும் இந்நகராட்சி ஆணையரை பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு W.P.NO.12967/2024 என எண்ணிடப்பட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர் வழக்காட சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.B. ஆனந்த் அவர்களை நியமனம் செய்யப்பட்டு வழக்காடப்பட்டு வருகிறது. இந்நிலையில் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்கள் 03.07.2024ஆம் நாளிட்ட கடிதத்தில் வழக்கு கட்டணம் ரூ,20,000 வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் திரு. B. ஆனந்த் அவர்களை நியமனம் செய்ததை அங்கிகரித்தும் வழக்கு கட்டணம் ரூ.20,000 வழக்கவும், மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.957/2024/எப்1

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது, மன்ற தீர்மான எண்.**993

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம், பழைய கா.ச.எண்21/பகுதி, நகரளவை எண் 34/2இல், கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்திதிட்டஎண்.3இல் உத்தேசிக்கப்பட்டுள்ள A–A 60 அடி அகல திட்ட சாலையை நீக்கம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை , நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் ஈரோடு, நகர் ஊரமைப்பு துணை உதவி இயக்குநர் ஈரோடு, உதவி இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் கோபிசெட்டிபாளையம் உள்ளுர் திட்ட குழுமம் ஈரோடு மற்றும் ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆகியோருக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் திருமதி G.M. சுசித்ரா என்பரால் W.P.NO. 20799/2024 இன் படி வழக்கு தொடரப்பட்டு 01.08.2024 அன்று வழக்கு விசாரணைக்கு வரப் பெற்று நிலுவையாக இருந்து வருகிறது.

மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர்வழக்காட சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களை நியமனம் செய்து வழக்காடப்பட்டு வருகிறது. இந்நிலையில் 03.07.2024 மற்றும் 25.07.2024 ஆகிய நாளிட்ட கடிதங்களில் வழக்கு கட்டணம் ரூ.20,000 வழங்குமாறு சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.B. ஆனந்த் அவர்களால் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கு கட்டணம் ரூ.20,000 வழங்கவும் மேற்படி வழக்கறிஞரை நியமனம் செய்யதமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண் 1279/2024/எப்1

**அலுவலகக் குறிப்பு;** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.**994

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய ஆஸ்பத்திரி வீதியில் தமிழ்நாடு அரசு கலைஞர் நகர்புறமேம்பாட்டு திட்ட நிதியில் கட்டப்பட்டு 12/08/2024–ல் திறப்புவிழா கண்ட நூலகம் மற்றும் அறிவுசார்மையத்திற்கு டைம்ஸ் ஆப் இந்தியா – ஆங்கில தினசரி நாளிதழ் மற்றும் தமிழ்இந்து – தமிழ்

தினசரி நாளிதழ் வாங்க வேண்டியுள்ளது. மேற்படி இதழ்களுக்கான உத்தேசசெலவினம் ரூ. 10.000/– ஆகும். மேற்படி இதழ்கள் விநியோகம் செய்யவும் . அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1438/2024/பி3

**அலுவலக குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை பொது நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.995**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் மேல்நிலைப் பள்ளியில் புதியாதாக மூன்று வகுப்பறைகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 28.00 இலட்சத்திற்கு கட்டிடம் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் படிக்கட்டுகளின் கூரை கைபிடிகள், Weatharing course, Pressed Files, வகுப்பறைகளின் ஜன்னல்கள் மற்றும் கதவுகளுக்கு UPUC Doorsand Windows பொருத்த தயரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.20 இலட்சத்திற்கு கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்க குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காண் செலவுதொகை ரூ.5.20இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2,அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.996**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் மழைநீர் வடிகால் அனைத்தும் மிகவும் பழுது ஏற்பட்டு மழைகாலங்களில் பொதுமக்களுக்கு மிகவும் இடையூராக உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைக்கு இணங்க நகராட்சி பகுதிகளில் மழை நீர் வடிகால் கட்ட ஆலோசகர்கள் நியமித்து Slope Vent and Volulme Design பெறவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியின் கீழ் ஒப்பந்த புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவுத்தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.997**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கும் மற்றும் ஆணையாளர் குடியிருப்புக்கும் தினசரி நாளிதழ்கள் 2024–2025 ஆம் ஆண்டிற்கு வாங்கி கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.2,00,000/– ஆகும். அச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவின தொகை ரூ.2,00,000/– னை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.998**

23. தமிழ்நாடு அரசிதழ் எண் 35, நாள் 28.08.2024,ல் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்யவதற்கான ஒரு சட்டம் எண் 25 / 24 நாள்.28.08.2024 ன் படி கீழ்கண்டவாறு திருத்தம் செய்து சட்டம் இயற்றப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டம் 9/1999 இரண்டு மற்றும் மூன்றாம் பிரிவிற்கான திருத்தம் 3–A என்னும் பிரிவை உட்புகுத்துதல் 32, 44, பிரிவிற்கான திருத்தம் 78, 82, 83, 84, 97, ஆம் பிரிவிற்கான மாற்றீடு 116, 117–B பிரிவிற்கான திருத்தம். 117–G, 117–S பிரிவிற்கான மாற்றீடு. 117–D, 117–L, 117–M, 117–O, 117–P, 118, 119, 120, 122, 128, ஆம் பிரிவிற்கான திருத்தம். 117–S, பிரிவிற்கான மாற்றீடு, 133, 137, 135, 145, 155, 161–A, 170, 173, 175, 194, 198, ஆம் பிரிவிற்கான திருத்தம். 199–A பிரிவினை உட்புகுத்துதல் 200 பிரிவிற்கான திருத்தம். ந.க.எண்.1563/2024/எப்1

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு : பதிவுசெய்யப்பட்டது , மன்ற தீர்மான எண்.999**

24. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள கடைகள் மற்றும் காலியிட குத்தகை இனங்களுக்கு 31.03.2018 அன்று 9 ஆண்டுகள் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை. நாள் 03.07.2007 ன் படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண். 224 நாள் 08.11.2018. (2230/2017/அ3) மேற்கண்டவாறு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையின் அடிப்படையில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை பட்டியலில் கண்டுள்ள கடை குத்தகைதாரர்களுக்கு முதல் மூன்று ஆண்டுகள் உரிமம் வழங்கப்பட்டு, மேற்படி உரிமம் 31.03.2021ந் தேதியுடன் முடிவடைந்தது. மேலும் பட்டியலில் கண்டுள்ள கடை குத்தகைதாரர்களுக்கு இரண்டாவது மூன்று ஆண்டுகள் 01.04.2021 முதல் 31.03.2024 வரை உரிமம் வழங்கப்பட்டு மேற்படி உரிமம் 31.03.2024 உடன் முடிவடைந்துள்ளது, தற்போது பட்டியலில் கண்டுள்ள கடை குத்தகைதாரர்கள் 01.04.2024 ந் தேதி முதல் 31.03.2027 வரை மூன்றாவது மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 057/28 | கச்சேரி வீதி நெடுஞ்சாலை துறை அருகில் கசாப் கடை அருகில் எண்.1 | கிருஷ்ணமூர்த்தி பி,எப் த/பெ. மாரப்பமுதலியார் | 1,725 | 1,984 |
| 2 | 057/41 | திரு.வி.க வீதியில் 5X5 காலியிடத்தில் கசாப் கடை | பழனிச்சாமி.கே த/பெ.கருப்புச்சாமி | 1,725 | 1,984 |
| 3 | 057/85 | ராமநாதன் வீதி கடை எண்.1 | பொண்ணம்பலம்.கே த/பெ.காலியப்பன் | 2300 | 2,645 |
| 4 | 057/87 | ராமநாதன் வீதி கடை எண்.3 | ராமய்யா.கே.எ த/பெ,ஆறுமுகம் | 2300 | 2,645 |
| 5 | 057/88 | ராமநாதன் வீதி கடை எண்.4 | சண்முகம்.ஜி.எஸ் | 2300 | 2,645 |
| 6 | 057/89 | வாய்க்கால் வீதி, கடை எண். 1 | கலைசெல்வன். கே | 2300 | 2,645 |
| 7 | 057/90 | வாய்க்கால் வீதி, கடை எண். 2 | சென்னியப்பன். பி த/பெ. பிரபாகரன் | 2300 | 2,645 |
| 8 | 057/108 | புதிய ஆஸ்பத்திரி வீதி காலியிடம் சமுதாயகூடம் அருகில் இறைச்சிகடை | பிரபாகரன்.ஈ.கே த/பெ. குப்புச்சாமி | 3450 | 3968 |
| 9 | 057/111 | பழைய ஆஸ்பத்திரி வீதி மருத்துவமனை முன்பு பெட்டிக்கடை | ரத்தினசாமி.பி, த/பெ. பழனியப்பன் | 2,300 | 2,645 |
| 10 | 057/112 | மொடச்சூர் ரோடு தகரப்பெட்டிகடை–1 | துரைசாமி.ஆர் | 2,300 | 2,645 |
| 11 | 057/116 | பழைய ஆஸ்பத்திரி வீதி தகரப்பெட்டிகடை–1 | குருசாமி.ஜி.எம் | 2,300 | 2,645 |
| 12 | 057/135 | பேருந்துநிலையத்தில் 5"5 அளவு காலியிடத்தில் ஆவின் பாலகம் (தகரப்பெட்டி) | அன்னை சந்தியா மகளிர் சுய உதவிக் குழு | 3,450 | 3,968 |
| 13 | 057/167 | வாய்க்கால் ரோட்டில் அமையப்பெற்றுள்ள புதிய கடை எண் 2 | அமீனா பேகம் க/பெ. யாகூப் | 2,358 | 2,712 |
| 14 | 057/542 | ஐயுடிபி– வாரச்சந்தை கடை எண் 13 | சிவக்குமார். எம்.ஈ த/பெ. ஈஸ்வரமூர்த்தி | 4,370 | 5.026 |
| 15 | 057/834 | எம்யுடிஎப்–பழைய பேருந்து நிலைய கடை எண் 18 | கருப்புசாமி.பி த/பெ.பழனியப்பநாடர் | 7,245 | 8,332 |
| 16 | 057/960 | டிஎன்யூடிஎப்– புதிய பேருந்து நிலையம் கடை எண் 10 | தங்கராஜ்.கே. த/பெ.கருப்பணகவுண்டர். | 6,900 | 7,935 |
| 17 | 057/966 | எம்யூடிஎப்– பழைய பேருந்து நிலைய கடை எண்.1 க்கு கிழபுறம் உள்ள மாடிபடிக்கடை | மெய்யழகன்.பி | 9,200 | 1,580 |

மேற்கண்ட விபரப்படி பட்டியலில் கண்டுள்ள 17 கடை குத்தகைதாரர்கள் 01.04.2024 முதல் தற்போதய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 31.03.2027 வரை உரிமம் நீட்டிப்பு செய்ய சம்மதம் தெரிவித்து உரிமம் புதுப்பித்தல் கட்டணம் வித்தியாச வாடகை வைப்பு தொகை மற்றும் ஒப்பந்தப்பத்திரம் ஆகியவற்றுடன் உரிமம் நீட்டிப்பு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர், அதன் அடிப்படையில் வருவாய் ஆய்வர் அவர்களின் உரிமம் நீட்டிப்பு செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள 17 கடை குத்தகைதாரர்களுக்கு 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்றாண்டுகளுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்யலாம் என தனது 18.09.2024 ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்

எனவே பட்டியலில் கண்டுள்ள 17 கடை களுக்கு கலம் (5)ல் உள்ள தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து கலம் (6) ல் கண்டுள்ள படி மாதவாடகை நிர்ணயம் செய்து 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.1000**

25. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 ( 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35 ) 14.03.2023 ஆம் தேதி முதல் அமல் படுத்தப்பட்டுள்ளதன் பேரில் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள வார்டுகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமக்கட்டணங்கள் கோபிசெட்டிபாளையம் நகர்மன்ற தீர்மான எண்.728 நாள்.29.12.2023 இன் படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொழில் உரிமக் கட்டண விகிதங்களின் அடிப்படையில் தொழில் உரிமம் வழங்க ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டியுள்ளது.

எனவே கீழ்கண்டவாறான கோபிசெட்டிபாளையம் நகராட்சி உள்ளாட்சி துறை அறிவிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற்று ஈரோடு மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**உள்ளாட்சித் துறை அறிவிக்கை**

**(ந.க.எண்.2812/2023/எச்1 நாள்: 29.12.2023)**

**நகர்மன்ற தீர்மானம் எண்.728/2023 நாள்: 29.12.2023**

**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**

(1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் ( 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35ன் படி திருத்தப்பட்டது) பிரிவு 102, 102(அ), 103, 104,114, 114A, , 199 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 மற்றும் 290 ஆகிய உட்பிரிவுகளின்கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகள்)

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் ( 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35 ) பிரிவு 102, 102(அ), 103, 104,114, 114A, மற்றும் 199 ன் படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 மற்றும் 290ன் படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 394ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள்,தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான உப விதிகள் ஏற்படுத்தப்பட்டு இதன் மூலம் மக்களின் கவனத்திற்கு அறிவிக்கை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 மற்றும் 290ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தாற் போல் நிர்ணயம் செய்து உப விதிகள் ஏற்படுத்தி உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிடும் பொருட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு கோபிசெட்டிபாளையம் நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும்

விவரப்படி உரிமக் கட்டணம் இவ்வறிவிக்கை மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் நிர்ணயம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்குதல் குறித்த கோபிசெட்டிபாளையம் நகராட்சி உபவிதிகள்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் – (1) அட்டவணைகள் I, II மற்றும் III–ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், கோபிசெட்டிபாளையம் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் விண்ணப்ப கட்டணத்தினை எந்த ஒரு டிஜிட்டல் செலுத்துமுறை மூலமாகவோ அல்லது வங்கி வரைவோலை வாயிலாகவோ செலுத்தலாம் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் –17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உரிமம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18 –இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1) –இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு
குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

a) உரிமம் பெறுபவர், 2019– ம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டட விதிகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.
b) நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தாலும் தடைசெய்யப்பட்ட நடவடிக்கை எதனையும், உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தில் மேற்கொள்ளக்கூடாது.
c) உரிமம் பெறுபவர், வளாகத்தின் தரையினை தளவரிசை அமைத்தோ அல்லது பிறவாறாகவோ உட்புக முடியாத வகையிலும், பொருத்தமான வடிகால் அமைப்புடனும் மற்றும் எல்லா நேரங்களிலும் ஒழுங்காகவும், நல்ல முறையிலும் பராமரிக்கச் செய்ய வேண்டும்.
d) அந்த வளாகம் சரியாக இணைக்கப்பட்டு, பொருத்தமான நுழைவாயில்கள் மற்றும் வாயில்களுடன் ஏற்படுத்தப்பட வேண்டும்.
